Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 347/2022 Date:16.07.2026
Deposition of witness for prosecution: PW2 ( LW2)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | இளையன் என்ற இளையராஜா | Village | எழுவனம்பட்டி |
| Father/ Husband Name | கழுவத்தேவர் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 45 /2026 | Calling | கூலி |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 16.07.2026. TIME 04.00 **PM**

1, 2 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள். எனது சித்தப்பா மகன் லோகேந்திரன் என்பவர் எதிரிகள் மீது ஏற்கனவே அளித்திருந்த புகாரினை என் தூண்டுதலின் பெயரில் அளித்ததாக கடந்த 02.08.2020-ம்தேதி மாலை 06.30. மணியளவில் நான் எனது வீட்டின் வெளியே இருந்த போது மேற்படி எதிரிகள் என்னை பார்த்து உன் ஆத்தா, அம்மா என அசிங்கமாக பேசி சத்தம் போட்டுக்கொண்டு 1-வது எதிரி என்னை அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். சத்தம் கேட்டு விலக்கிவிட வந்த எனது சித்தப்பா மகன் ஆனந்தன் என்பவரை வேல்கம்பால் இடதுப்பக்க கன்னத்தில் 1-வது எதிரி குத்தியதில் இரத்த காயம் ஏற்பட்டது. 2-வது எதிரி ஆனந்தனை கட்டை கம்பால் அடித்தார். நானும், ஆனந்தனும் உத்தமபாளையம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். ஆனந்தன் சம்பவம் பற்றி புகார் அளித்தார்.போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd. P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.